தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்


RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 175 ★ 26.10.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:175 ★26.10.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai





திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொடைக்கானல் பகுதிகளில் நேற்று பெய்த கனமழையால் கொடைக்கானல் உட்பட்ட அடுக்கம் பஞ்சாயத்து பகுதியில் முழுவதும் போக்குவரத்து பாதிப்படைந்தது பொதுமக்கள் மிகவும் அவதிக்கு உள்ளனர் அப்பகுதியை பழனி சட்டமன்ற உறுப்பினர் கே. ரவி மனோகரன் MLA., அவர்கள் தலைமையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை கொடைக்கானல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நெடுஞ்சாலை துரை அதிகாரிகள் மற்றும் வட்டாட்சியர் மற்றும் வனத்துறையினர் அதிகாரிகள் உடன் சென்று நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் விரைந்து உடனடியாக சரி செய்யப்பட்டு பொதுமக்கள் பாதிப்பிலிருந்து இருந்து காத்து துரித நடவடிக்கை எடுக்கப்பட்டபோது எடுத்த படம்

குடிநீரை காய்ச்சி குடியுங்கள்; பழநி நகராட்சி வேண்டுகோள்

பருவமழை துவங்கியதையடுத்து பொதுமக்கள் குடிநீரை நன்கு கொதிக்க வைத்து குடிக்க வேண்டுமென பழநி நகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

தற்போது பெய்து வரும் பருவமழை காரணமாக பழநி நகராட்சி சார்பில் குடிநீரின் தரத்தினை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் 6 மேல்நிலை தொட்டிகள் பாலாறு–பொருந்தலாறு மற்றும் கோடைகால நீர்த்தேக்க சுத்திகரிப்பு நிலையம் பிரதான குழாய் மற்றும் குடிநீர் விநியோகிக்கும் அனைத்து குழாய்களில் உடனடியாக சுத்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகராட்சி குடிநீர் விநியோகத்தில் ஐஎஸ்ஐ தரமுடைய பிளீச்சிங் பவுடர் மற்றும் உரிய குளோரின் அளவு கண்காணிக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதோடு, விநியோகத்தின் இறுதியில் குறைந்தபட்சம் 0.2 பி.பி.எம் குளோரினேஷன் செய்யப்படுகிறது.

மேலும், நீர் சார்ந்த நோய வைத்தவிர்க்க பொதுமக்கள் தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும் என நகராட்சி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி தீபாவளி அருகாமையில் உள்ளது மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் பழனி ரயில்வே பீடர் ரோட்டில் கடும் போக்குவரத்து அதிகமாக உள்ளது அடிக்கடி போக்குவரத்து டிராபிக் இடையூறு ஆகிறது விரைவில் சரி செய்ய வேண்டுமென வாகன ஓட்டுனர்கள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்

தேசிய அளவில் மின் தேவை அதிகரிப்பு குறித்து மத்திய அரசு முன்கூட்டியே கணிக்காதது ஏன்? அமைச்சர் நிர்மல்குமார் கேள்வி

நடிகர் தனுஷ் அரசியலுக்கு வருகை தருவதைக் கண்டு தவெகவினர் அஞ்சுவதாக திமுக முன்னாள் அமைச்சர் சேகர்பாபு விமர்சித்திருந்தார்.

இதுகுறித்து, ராமநாதபுரத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழக மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல்குமார் பேசியதாவது:–

யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். ஒட்டுமொத்த தமிழக மக்களின் அன்பைப் பெற்ற முதல்–அமைச்சர் விஜய்யின் தலைமையில்தான் அடுத்த 30 – 40 ஆண்டுகள் ஆட்சி நடக்கும். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

மு.க.ஸ்டாலினையும் உதயநிதியையும் காட்டி



வாக்கு கேட்க முடியாத நிலைமைக்கு திமுக போய்விட்டது. மு.க.ஸ்டாலினையும் உதயநிதியையும் நம்பாமல், சேகர்பாபு போன்றோர் வேறு கட்சிகளில் சேர முடிவெடுத்திருக்கின்றனர். அதிமுகவிலும் இதே நிலைமைதான் என்றார்.

அதனை தொடர்ந்து, ராஜஸ்தானில் ஒரு யூனிட் மின்சாரத்துக்கு ரூ.46.09 செலவு என்பது மத்திய அரசின் பெரும் தவறு. தேவை விநியோக இடைவெளிகள் ஏன் முன்கூட்டியே கணிக்கப்பட்டு திட்டமிடப்படவில்லை? இதுகுறித்து மத்திய மின்சார அமைச்சகம் ஆராய வேண்டும்

இப்போதாவது தேசிய அளவிலான முன்னறிவிப்பு மாநிலங்களுடனான ஒருங்கிணைப்புக்கு திட்டமிட வேண்டும் என்று கூறினார்.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும்

கண்காணிப்பு அலுவலர் பிருந்தா தேவி அறிவுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில், வெள்ளப் பாதிப்பு பகுதிகளைக் கண்டறிந்து நிவாரண முகாம்கள், மீட்புக் குழுக்கள், மருத்துவ வசதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் சமூக நல இயக்குநருமான டாக்டர் இரா. பிருந்தா தேவி தலைமையில், மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 25.10.2026 அன்று நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை, வெள்ளப்பெருக்கு, குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குதல், சாலைப் போக்குவரத்து பாதிப்பு மற்றும் மின்தடை உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. பேரிடர் காலங்களில் பொதும க்களின் உயிர் மற்றும் உடைமை களைப் பாதுகா த்து, பாதிக்கப்பட்ட வர்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்க அனைத்துத் துறை களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

வருவாய்த்துறை சார்பில் வெள்ளப் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து, அங்கு வசிக்கும் மக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான நிவாரண முகாம்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். முகாம்களில் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

வெள்ளநீர் தேங்கும் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்று வதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் விதிமுறைக ளின்படி நிவாரண உதவிகளைத் தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்ப ணித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் ஏரிகள், நீர்நிலை கள் மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்களில் உள்ள அடைப்புகளை அகற்றி, மழைநீர் தடையின்றி வெளியேற ஏற்பாடு செய்ய வேண்டும். தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கினால், அ தை வெளியேற்றுவதற்குத் தேவையான மோட்டார் பம்புகள் மற்றும் உபகரணங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். காவல்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், வெள்ளப் பாதிப்பு பகுதிகளில் பொதுமக்க ளைப் பாதுகா ப்பாக வெளியே ற்றுவதற்கும், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொ ள்வதற்கும் தயாராக இருக்க வேண்டும். மீட்பு வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் செயல்ப டும் நிலையில் இருப்பதை உறுதி செய்வதுடன், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 108 அவசர ஊர்திகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். ஆக்சிஜன் உருளைகள், உயிர்காக்கும் கருவிகள், அத்தியாவசிய மருந்துகள், பாம்புக்கடி மற்றும் விஷப்பூச்சிக்கடி சிகிச்சை க்கான மருந்துகள் போதிய அளவில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மருத்துவமனை களில் தடையற்ற மின்சாரம் கிடைப்ப தற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகள், மருத்துவம னைகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட பொது கட்டிட ங்களின் றுதித்தன்மையை ஆய்வு செய்து, சேதமடை ந்த கட்டிடங்க ளைச் சீரமைக்க வேண்டும். வெள்ள த்தால் பாதிக்க ப்படக்கூடிய மக்களைத் தங்க வைப்ப தற்காகப் பாதுகாப்பான பள்ளிகள் மற்றும் அரசு கட்டிடங்க ளை நிவாரண முகாம்க ளாகத் தேர்வு செய்து, தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், உணவுப் பொருள் வழங்கல் துறை சார்பில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்க ளைப் போதிய அளவில் இருப்பு வைக்க வேண்டும். மின்சார வாரியம் சேதமடை ந்த மின்கம்ப ங்கள் மற்றும் மின்கம்பி களை உடனடியாகச் சீரமைக்க வும், தொலை த்தொடர்புச் சேவைகள் தடையின்றிச் செயல்படு வதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்து றையினர் மழையால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைக்கவு ம், கால்நடைப் பராமரி ப்புத்து றையி னர் கால்நடைக ளுக்கான பாதுகாப்பு மற்றும் தீவன வசதிகளை ஏற்படு த்தவும் அறிவுறுத்த ப்பட்டது.

பேரிடர் காலங்களில் ஏற்படும் உயிரிழப்புகள், கால்நடை உயிரிழப்புகள் மற்றும் வீடுகள் சேதமடை வதால் பாதிக்கப்படும் மக்களுக்கான நிவாரண உதவிகளை விரைந்து வழங்கத் தேவையான விவரங்களை முன்கூட்டியே சேகரிக்க வேண்டும். அனைத்துத் துறைகளும் தங்களுக்கான முன்னெச்சரிக்கைப் பணிகளை விரைந்து முடித்து, பருவமழைக் காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநரும் திட்ட இயக்குநருமான பூ. காஞ்சனா, வருவாய்க் கோட்டாட்சியர் செல்வம் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வேட்டைக்காடாக தமிழ்நாடு மாறி வருகிறது: மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொலைக்களமாகவும் குற்றவாளிகளின் வேட்டைக்காடாகவும் தமிழ்நாடு மாறி மாறி வருவது தடுக்கப்பட வேண்டும் என மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில்,

கடந்த இரு மாதங்களாகத் தமிழ்நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நடைபெற்று வரும் கொலை,

கொள்ளை, பாலியல் வன்கொடுமை மற்றும் சிறுவர்கள் மாயமாகும் சம்பவங்களால் பொதுமக்கள் பீதியில் உறைந்து போயுள்ளனர்.

இதை முன்பே கணித்துத்தான், "இது என்ன நாடா இல்லை காடா?" என நாஸ்ட்ரடாமஸ் போல



தேர்தலுக்கு முன்பு விஜய் அவர்கள் பேசினாரா?

'துப்பாக்கி ஹீரோ' எனத் திரையில் பார்த்ததை நம்பி வாக்களித்த மக்களே, குற்றங்களைத் தடுக்கத் 'துப்பில்லாத ஹீரோ' எனப் பேசத் தொடங்கிவிட்டனர்.

கோட் சூட் – பட்டு வேட்டி சட்டை அணிவதும், கான்வாயில் வந்து செல்வதும் மட்டும்தான் முதலமைச்சரின் பணி என்ற மூடநம்பிக்கையில் இருந்து எப்போது விடுபடுவார் திரு. விஜய்?

முதமைச்சருக்கான அலுவலகத்தையும், இல்லத்தையும் தயார் செய்வது தொடர்பான வேலைகளைத் தவிர, ஆறு மாத த.வெ.க. ஆட்சியில் உருப்படியாக வேறு ஒன்றுமே நடந்ததாகத் தெரியவில்லை.

தனது சொகுசைப் பற்றி இருக்கும் அக்கறையில் சிறிதேனும் பொதுமக்கள், குழந்தைகளின் பாதுகாப்பில் முதலமைச்சருக்கு இருக்க வேண்டும்.

கொலைக்களமாகவும் குற்றவாளிகளின் வேட்டைக்காடாகவும் தமிழ்நாடு மாறி வருவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என அதில் பதிவிட்டுள்ளார்.

தென்பெண்ணையாறு, செய்யாற்றில் வெள்ளப்பெருக்கு அபாயம்:

கரையோர மக்களுக்கு ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை

கிருஷ்ணகிரி அணையிலிருந்து தென்பெண்ணையாற்றில் வினாடிக்கு 2,220 கன அடி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும், ஜவ்வாது மலை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், தென்பெண்ணையாறு மற்றும் செய்யாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாகத் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ண கிரி அணையிலிருந்து வினாடிக்கு 2,220 கன அடி உபரிநீர் தென்பெண்ணையாற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த உபரிநீர் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்துக்கு உட்பட்ட நீப்பத்துறை கிராமத்தைக் கடந்து சாத்தனூர் அணைக்குச் செல்கிறது.

எனவே, தென்பெண்ணையாற்றின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். யாரும் ஆற்றில் இறங்கவோ, ஆற்றைக் கடக்கவோ, குளிக்கவோ கூடாது. ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்கக் கூடும் என்பதால், பொதுமக்கள் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மேலும், ஜவ்வாது மலை மற்றும் அதை ஒட்டியுள்ள செய்யாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் செய்யாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, செய்யாற்றின் கரையோரக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஆற்றில் இறங்குவதையும், கடந்து செல்வதையும், குளிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்கும் சூழலில் பொதுமக்கள் ஆபத்தை உணர்ந்து செயல்படுவதுடன், குழந்தைகள் மற்றும் கால்நடைகளை ஆற்றின் அருகே செல்லாமல் பாதுகாக்க வேண்டும். மாவட்ட நிர்வாகத்தின் எச்சரிக்கையைப் பின்பற்றி, பாதுகாப்பாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டத்தில் கனமழையின் காரணமாக நாளை (26.10.2026) பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்கா மூர்த்தி (இ. ஆ. ப) அவர்கள் தெரிவித்துள்ளார்

மாதவரம், வடபெரும்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நலப்பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

புழல் எம்.நாராயணன் வழங்கினார்

மாதவரம் வடபெரும்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்! புழல் எம்.நாராயணன் வழங்கினார்!

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வார்டு வடபெரும்பாக்கம் பகுதியில் இயங்கி வரும் அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி கடந்த வாரம் போதிய மாணவர்கள் இல்லாததினால் மூடவுள்ளதாகவும் மாணவர்கள் பக்கத்து பள்ளியில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் ஆசிரியர் வலியுறுத்தியதாக அறிந்து, மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் நிர்வாகிகள் பள்ளிக்கு நேரில் சென்று சுமார் 95 ஆண்டு காலம் பழமையான பள்ளியை மூடுவதை எதிர்த்து மாவட்ட கல்வி அலுவலரி டம் பேசி மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடு செய்தனர்.


இதனைத் தொடர்ந்து இப்பள்ளியில் மீண்டும் 8 மாணவர்கள் புதிதாக சேர்ந்தனர். மேற்படி பள்ளிக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று பார்வையிட்டு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிக ளுக்கு நோட்டுப் புத்தக ங்கள், இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மேலும் பள்ளியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மருத்துவர்கள் இலவசமாக மருத்துவ முகாமை நடத்தி குழந்தை களுக்கு உயரம், எடை, பரிசோதனை ஆகியவற்றை மேற்கொண்டு மருந்து மாத்தி ரைகளை இலவச மாக வழங்கினர். இதில் 17வது வட்டச் செ யலாளர் கே.கருணாகரன், சி.மூர்த்தி, எஸ்.பாலாஜி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்வன், கே.சண்முக பிரியன், எஸ்.சிவகுமார், டி.வினோத், எஸ். நாகராஜ், ராஜ்குமார், டி.திவாகர், எம். மைக்கேல், இ.கார்த்திக், பி.செந்தில், கோவிந்தன், எம்.என். தளபதி, சின்னத்தோப்பு சதீஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் ஐப்பசி பௌர்ணமி அன்னாபிஷேகம்






இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகரம் காமாட்சி அம்பாள் உடனுறை கைலாசநாதர் திருக்கோவிலில் ஐப்பசி பௌர்ணமி அன்னாபிஷேகம் முன்னிட்டு கைலாசநாதரும் காமாட்சிஅம்பாளும்பழங்கள்காய்கறிகள்கீரைகள்கொண்டு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

மாதவரம் மத்திய பகுதி தவெக சார்பில்

மக்கள் சேவை அலுவலகம், தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், அன்னதானம்

தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் மாதவரம் மத்திய பகுதி செயலாளர் புழல் எம்.மணிமாறன், பகுதி பொருளாளர் வழக்கறிஞர் ஆர். மகாலட்சுமி ஆகியோர் தலைமையில் மக்கள் சேவை அலுவலகம் திறப்பு விழா, மாணவச் செல்வங்களுக்கு இலவச கணினி பயிற்சி, தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட





100க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு 5 கிலோ அரிசி, சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள், அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மாதவரம் தொகுதி புழல் அடுத்த காவாங்கரை ஜி.என்.டி. சாலையில் நடைபெற்றது.

திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு மக்கள் சேவை அலுவலகத்தை ரிப்பன் வெட்டி, குத்து விளக்கேற்றி வைத்து மக்கள் சேவை மையம், இலவச கணினி பயிற்சி மையத்தை திறந்து வைத்து தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்களுக்கு அரிசி, சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் அன்னதானத்தையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் தவெக மாவட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புழல் ஏரிக்கரையில்

மண்டிக் கிடந்த செடி, கொடிகளை அகற்றிய தவெக நிர்வாகிகள், உறுப்பினர்கள், தன்னார்வலர்கள்





மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரங்களில் ஒன்றான புழல் ஏரியில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் முதற்கட்டமாக சீரமைப்புப் பணிகள் நிகழ்ச்சி திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட தவெக சார்பில் மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய் பிரபு தலைமையில் புழல் செங்குன்றம் ஏரி கரையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட தமிழக வெற்றிக் கழக தன்னார்வலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு புழல் நீர்த் தேக்க கரைகளில் மண்டிக் கிடந்த செடி கொடிகளை அகற்றினர். அதே போல் பொதுமக்கள் பயன்படுத்தும் புழல் ஏரி நடைபாதைகளில் புதர் போல் காட்சியளித்த செடி, கொடிகளை அகற்றினர். உடனுக்குடன் குப்பைகளை கருப்பு கவர்களில் கட்டி ஏரிக்கரையின் கீழே கொண்டு வரப்பட்டது பாராட்டத்தக்கது.

இந்நிகழ்வில் தவெக மாவட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள், தன்னார்வலர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது.

செடி, கொடிகளை அகற்றும் பொழுது யோனி உள்ளிட்ட பொதுமக்களுக்கு உடல்நலத்திற்கு பரன் தரக்கூடிய மரங்களையும் அகற்றியது சமூக ஆர்வலர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செங்குன்றம் ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ முருகர் ஸ்ரீ சீரடி சாய்குருநாத் கோவிலின் மகா கும்பாபிஷேகம்

செங்குன்றம் ஆர்ஜிஎன் நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ முருகர் ஸ்ரீ சீரடி சாய் குருநாத் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் ஆர்ஜிஎன் நகர் குடியிருப்பு நலச் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ நாகாத்தம்மன் ஆலயத்தின் பந்தக்கால் நிகழ்ச்சியுடன் துவங்கப்பட்ட மகா கும்பாபிஷேகமானது கணபதி பூஜை, விக்னேஸ்வர பூஜை, கோ பூஜை, கணபதி ஹோமம் ஆகியவை ஆலய வளாகத்தில் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்றது.

தொடர்ந்து யாகசாலையில் இருந்து புனித நீர் புறப்பாடு நடைபெற்று திருக்கோவிலின் விமான கலசத்தில் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் பக்தர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் கும்பாபிஷேக புனித நீர் அப்பகுதியில் குடியிருந்த பொதுமக்களின் மத்தியில் தெளிக்கப்பட்டு வண்ண மலர்களாலும் வாசனை திரவியங்களாலும் நாகாத்தம்மன் சுவாமி அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. ஆலய நிர்வாகம் சார்பாக 500க்கும் மேற்பட்டோருக்கு சிறப்பு அன்னதானம் ஆர்ஜிஎன். நகர் குடியிருப்பு நலச் சங்கம் சார்பில் வழங்க ப்பட்டது. இந்நிகழ்வில் ஆர்ஜிஎன். நகர் குடியிருப்பு நலச் சங்க நிர்வாகிகள், பக்த கோடிகள், செங்குன்றம் சுற்றுவட்டார பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.





வாலாஜாபேட்டை மங்களாம்பாள் அரசு நிதி உதவி நடுநிலைப்பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா

பள்ளிக்கு ரூ.35 ஆயிரம் நன்கொடை

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை மங்களாம்பாள் அரசு நிதி உதவி நடுநிலைப் பள்ளியில் 2002–ஆம் ஆண்டு பள்ளியில் பயின்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து சந்திக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் முன்னாள் மாணவர்கள் தங்களுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களைச் சந்தித்து, அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பாத பூஜை செய்து வரவேற்றனர் பின்னர் ஆசிரியர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து, முன்னாள் மாணவர்கள் தங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்து, தங்களது பள்ளிப் பருவ நினைவுகளையும், வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பள்ளியில் ஒன்றாகப் படித்த நண்பர்கள் மீண்டும் சந்தித்தது அனைவரிடமும் மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. ஆசிரியர்களும் முன்னாள் மாணவர்களைச் சந்தித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்தச் சந்திப்பு நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, முன்னாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் ரூ.35,000 நிதியுதவி வழங்கினர். தங்களுக்குக் கல்வியையும், நல்லொழுக்கத்தையும் கற்றுக்கொடுத்து வாழ்க்கையில் முன்னேற வழிகாட்டிய பள்ளிக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் இந்த நிதியுதவி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, மாணவர்களின் அறிமுகம், பள்ளிப் பருவ அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், முன்னாள் மாணவர்கள் அனைவரும் இணைந்து குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டு தங்களது பள்ளிப் பருவ நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டனர். தொடர்ந்து, மதிய உணவாக அறுவை விருந்து பரிமாறப்பட்டது. இதில் முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றாக அமர்ந்து உணவருந்தி மகிழ்ந்தனர்.

நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்த இந்தச் சந்திப்பு, பழைய நினைவுகளை மீட்டெடுப்பதோடு மட்டுமல்லாமல், பள்ளியின் வளர்ச்சிக்கும் முன்னாள் மாணவர்கள் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தியது.

ஆசிரியர்களைக் கௌரவித்தல், நட்புப் புதுப்பித்தல், குழுப் புகைப்படம் எடுத்தல் மற்றும் பள்ளிக்கு நிதியுதவி வழங்குதல் எனப் பல சிறப்பம்சங்களுடன் இந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி மகிழ்ச்சியுடன் நிறைவடைந்தது இந்நிகழ்ச்சியில் மாணவர்களின் குடும்பத்தினர் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஆற்காட்டில் பனை விதை நடும் பணி தொடக்கவிழா



பாலாறு பாதுகாப்பு நீர் மேலாண்மை குழு மற்றும் ஆற்காடு தொண்டை மண்டல இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு இணைந்து தெய்வத்திரு. பொன் கு.சரவணன் ஐயா அவர்களின் நினைவாக பனை விதைகள் நடும் விழா ஆற்காடு பாலாற்றங்கரையில் 24.10.2026 ஆற்காடு பைபாஸ் அலங்கார் பேக்கரி பின்புறம் நடைபெற்றது.

இவ்விழாவில் தலைவர் திரு. உழவன் கே.எம்.பாலு, திரு. விமல் நந்தகுமார், தொழிலதிபர், திரு. J. இலட்சுமணன், கணேஷ் நாட்டு மருந்து கடை திரு. கணேஷ், மணியம் திரு. பாஸ்கர், திரு. பெல் பிரபு, விவசாய ஆர்வலர், திரு. A.M.உதயசங்கர், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதை தொடர்ந்து திரு. நாகநதி சந்திர சேகரன், வேலூர் பனை திரு. தினேஷ் சரவணன், திரு. M. G. ரவி, திரு.A V D பாலா, திரு. ஸ்தபதி தங்க ராஜி, பெல் இயற்கை நண்பர்கள் குழுவினர், திரு.மணி மார்க் சுந்தர் சிங், திரு.JCI மணிவண்ணன், திரு. பெல்கங்காதரன், திரு. ராஜ்குமார்,பொன் கு சரவணன் குடும்பத்தினர் ஆகியோருடன், ஸ்ரீ லட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளைதலைவர் Rtn.PHFஸ்ரீ பாலாஜி லோகநாதன் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஆற்காடு மகாலட்சுமி நர்சிங்கல்லூரிமாணவிகள் கலந்து கொண்டு முதற்கட்டமாக சிறப்பு விருந்தினர்களுடன் பனை விதைகளை நட்டனர்

வடகிழக்கு பருவமழை பாதிப்புகளைத் தடுக்க வந்தவாசி, சேத்துப்பட்டு, ஆரணியில் முன்னெச்சரிக்கைப் பணிகள் தீவிரம்

கண்காணிப்பு அலுவலர் பிருந்தா தேவி ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும் வகையில், வந்தவாசி, சேத்துப்பட்டு, ஆரணி பகுதிகளில் மேற்கொள்ள ப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், சமூக நல இயக்குநருமான டாக்டர் இரா. பிருந்தா தேவி, மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் முன்னிலையில் இன்று (அக். 25) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



வந்தவாசி நகராட்சிக்கு உட்பட்ட கமண்டல நாகநதி ஆற்றின் அருகே உள்ள எள்ளுப்பாறை பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்தார். ஆற்றில் அதிக அளவு வெள்ளநீர் செல்லும் சூழலில், அருகில் வசிக்கும் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், குடியிருப்புப் பகுதிகளில் தேங்கும் மழைநீரை விரைந்து வெளியேற்றவும் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, சேத்துப்பட்டு வட்டத்துக்கு உட்பட்ட நெடுங்குணம் இருளர் குடியிருப்புப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். அப்பகுதியில் தேங்கிய மழைநீரை வெளியேற்றும் பணிகள் மற்றும் சாலைக ளைச் சீரமைக்கும் பணிக ளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கூடலூர் தம்மணம்பட்டி கியூ லைப் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை; எம்.எல்.ஏ. ஜெகநாத்மிஸ்ரா ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

தேனி மாவட்டம், கூடலூர் அருகே தம்மணம்பட்டி பகுதியில் கியூ லைப் நிறுவனத்தின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை திறப்பு விழா நடைபெற்றது விழாவுக்கு நெஸ்ட் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் என். ஜெஹாங்கீர் தலைமை வகித்தார். நிறுவனத்தின் நுகர்வோர் பொருட்கள் பிரிவுத் தலைவர் எஸ்.கே.சசி மேனன் வரவேற்றார். விழாவில், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா சிறப்பு



விருந்தினராகக் கலந்து கொண்டு தொழிற்சாலையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொழிற்சாலை திறப்பின் போது ஜெகநாத் மிஸ்ரா பேசியதாவது:—

கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விவசாயத்துக்குப் பெயர் பெற்ற பகுதியாகும். இங்கு விளையும் காய்கறிகள் மற்றும் விவசாய விளைபொருட்களை உரிய விலைக்கு விற்பனை செய்வதில் விவசாயிகள் பல்வேறு சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக, விளைச்சல் அதிகமாக இருக்கும் காலங்களில் போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.இத்தகைய சூழலில், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் விளையும் காய்கறிகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து, இந்தத் தொழிற்சாலையில் பதப்படுத்தி, வெளிநாடுகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் வளைகுடா பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

மேலும் இதன் மூலம் இப்பகுதியில் விளையும் விவசாயப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகள் அதிகரிப்பதுடன், விவசாயிகளின் வருமானமும் மேம்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்தத் தொழிற்சாலையின் செயல்பாடுகள் விரிவடையும்போது, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.நேரடி வேலைவாய்ப்புகள் மட்டுமின்றி, போக்குவரத்து, பொட்டலமிடுதல், மூலப்பொருட்கள் கொள்முதல் உள்ளிட்ட தொடர்புடைய துறைகளிலும் வேலைவாய்ப்புகள் ஏற்படலாம்.

இப்பகுதியைத் தொழில் வளர்ச்சி பெற்ற பகுதியாக மாற்றுவதற்கு இதுபோன்ற நிறுவனங்களின் முதலீடுகள் உதவும். விவசாயிகளுக்கும் தொழில் துறையினருக்கும் இடையே நல்ல ஒருங்கிணைப்பு ஏற்பட்டு, உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். அதுவே இத்தகைய தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியால் மக்களுக்குக் கிடைக்கும் முக்கியப் பயனாகும் இவ்வாறு ஜெகநாத் மிஸ்ரா பேசினார்.

விழாவில் தேனி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வேந்திரன், தமிழக வெற்றிக் கழகத்தின் தேனி தென்மேற்கு மாவட்டக் கழக இணைச் செயலாளர் கூடல் செல்வேந்திரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் அய்யர், நிறுவனத்தின் பொது மேலாளர் ஜோப்பின், புளியமலை மேலாளர் அச்சங்குஞ்சு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் அரக்கோணம் கிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி, மாணவன் திரு.ரிஷிகேசன் அவர்கள் குத்துச்சண்டை கல்லூரி பிரிவில் (85–90 கிலோ எடைப் பிரிவு) தங்கப்பதக்கம் மற்றும் கலவை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவன் திரு.நல்லசிவம் அவர்கள் குத்துச்சண்டை பள்ளி பிரிவில் (70–75 கிலோ எடைப் பிரிவு) வெண்கலப் பதக்கம் வென்றுள்ளதையடுத்து இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுலகத்தில் (23.10.2026) அன்று சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.மோகனா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.ஞானசேகரன், குத்துச்சண்டைப் பயிற்சியாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி உள்ளனர்.

ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் கலைக்கல்லூரியில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு துவக்க விழா

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த விளாப்பாக்கம் ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் கலைக்கல்லூரியில் 32 வது



தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் நேற்று நடைபெற்றது இவ்விழாவிற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் பூபாலன் தலைமை தாங்கினார் ஸ்ரீ மகாலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, KRB இன்டர்நேஷனல் பள்ளியின் தலைவர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். KRB இன்டர்நேஷனல் பள்ளியின் முதல்வர் சுபாஷினி வரவேற்புரை வழங்கினார்

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் துணைச் செயலாளர் முனைவர் தேவி, தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு குறித்து உரையாற்றும் போது குழந்தைகளிடையே அறிவியல் சிந்தனை, ஆய்வு மனப்பான்மை மற்றும் அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் நோக்கில் நடைபெறும் இந்த மாநாட்டில் மாணவர்கள் தங்களது அறிவியல் ஆய்வுத் திட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு என்பது பள்ளி மாணவர்களிடையே அறிவியல் சிந்தனை, ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில் நடத்தப்படும் ஒரு சிறப்பான அறிவியல் நிகழ்வாகும் என்று பேசினார்

மாநாட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மோகனா தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார் அப்போது அவர் பேசுகையில்

இம்மாநாட்டின் மூலம் மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல், நீர்வளம், காற்று மாசுபாடு, காலநிலை மாற்றம், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், சுகாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ள வாய்ப்பு பெறுகின்றனர். மாணவர்கள் தங்களது பகுதியில் நிலவும் பிரச்சினை களை அடையாளம் கண்டு, அவற்றுக்கான அறிவியல் அடிப்படை யிலான தீர்வுகளை ஆராய்ந்து, ஆய்வறிக்கையாகத் தயாரித்து சமர்ப்பிக்கலாம் என்றும் இத்தகைய ஆய்வுகள் மாணவர்களின் சுயசிந்தனை, குழுப்பணி, தகவல் சேகரிப்பு மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனை மேம்படுத்துகின்றன. மேலும், ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு, தங்களது கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வு முடிவுகளை அறிவியல் மாநாடுகளில் பிற மாணவர்கள் மற்றும் வல்லுநர்கள் முன்னிலையில் எடுத்துரைக்கும் வாய்ப்பையும் பெறுகின்றனர். மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை உருவாக்கி, எதிர்கால அறிவியல் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, மாணவர்கள் இம்மாநாட்டில் ஆர்வத்துடன் பங்கேற்று, அறிவியல் அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என கூறினார் இறுதியாக தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் ஸ்ரீதர் நன்றியுரை ஆற்றினார்



தேனி மாவட்டத்தில் வடகிழக்குப்பருவமழை தீவிரமடைந்ததையொட்டி, குமுளி மலைச் சாலையில் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவண்ணம் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., , மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆரணி அருகே பாகிஸ்தான் ராணுவ உளவாளி இந்திய முன்னாள் ராணுவ அதிகாரி கைது

ஆரணி அருகே பாகிஸ்தான் உளவாளியான இந்திய முன்னாள் ராணுவ அதிகாரியை கணியம்பாடி போலீஸார் சனிக்கிழமை கைது செய்து மத்திய புலனாய்த்துறையிடம் ஒப்படைத்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த கண்ணமங்கலம் அருகே உள்ளகாட்டுகாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த பாபு என்பவர் கடந்த 1994 ஆண்டு வரை இந்திய ராணுவத்தில் ஆட்லெரி கேப்டனாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் இந்திய ராணுவத்தில் கேப்டனாக பணிபுரிந்த போது மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் பாகிஸ்தான் பெண் ஒருவருடன் ரகசிய தொடர்பு ஏற்பட்டு அவர் மூலம்இந்திய நாட்டின் ராணுவ ரகசியங்களை பாகிஸ்தான் ராணுவத்திற்கு தெரிவித்ததாகதெரிகிறது.

ஓய்வு பெற்ற பின்னரும் இந்திய ராணுவத்தின் ரகசியங்களை பாகிஸ்தான் பெண்உளவாளி மூலம் ரகசிய தகவல்களை இன்று வரை பாகிஸ்தான் ராணுவத்திற்குதெரிவித்து வருவதாக மத்திய



குற்றப்பிரிவு புலனாய்வு போலீஸான இன்டர்ஃபுல் போலீசா ருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

எனவே இந்திய ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் ராணுவ வீரர்மூலம் ராணுவ ரகசியங்கள் அனைத்தும் பாகிஸ்தான் ராணுவத்திற்கு தெரிவதைஅறிந்த மத்திய குற்றப்பிரிவு போலீசார் முன்னாள் ராணுவ வீரர் பாபுவின்ரகசியங்களை சேகரிக்க பல்வேறு தேடுதல் வேட்டைகளில் ஈடுபட்ட நிலை யில்ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர் திருவண்ணா மலை மாவட்டம் கண்ணமங்கலம் அருகே, வேலூர் மாவட்டம் சேர்ந்த கீழ்வல்லம் கிராமத்தில் ஆடம்பர பங்களா கட்டிக்கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்ததனர்.

பின்னர் போலீசார் பாபுவை பற்றி துப்பு கிடைக்காமல் நான்கு நாட்களாக வேலூர் மாவட்டம் பாகாயத்தில் தங்கி பாபுவை குறித்து தகவல்களைசேகரித்து பின்னர் இந்திய ராணுவ ரகசியங்களை மும்பையைச் சேர்ந்தபாகிஸ்தான் பெண் உளவாளி மூலம் பாகிஸ்தான் ராணுவத்திற்கு தெரிவித்தது பாபு என்பதே உறுதிப்படுத்தி தமிழக காவல்துறையின் ஒத்துழைப்போடு வேலூர் மாவட்டம் கணியம்பாடி காவல் நிலைய இன்ஸ்பெக்டர் புனிதா தலைமை யிலானபோலீசார் ஆரணி அருகேகாட்டுகாநல்லூரில் பதுங்கி இருந்த உளவாளி பாபுவைசுற்றி வளைத்து கைது செய்து ரகசிய இடத்திற்கு அழைத்துச் சென்று மத்திய குற்றப்பிரிவு இன்டெர்பில் போலீசாரிடம் தமிழக போலீசார் ஒப்படைத்தனர்.

செய்யாறு அருகே ஆக்கூரில் திருக்கண்டீஸ்வரர் கோயில் கும்பாபிஷேக விழா திரளான பக்தர்கள் பங்கேற்பு



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே ஆக்கூரில் திருக்கண்டீஸ்வரர் கோயிலில் நேற்று நடந்த கும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுக்கா ஆக்கூர் கிராமத்தில் அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மாள் சமேத திருக்கண்டீஸ்வரர் கோயிலில் மகா கும்பாபிஷேக விழா நேற்று காலை நடந்தது. கும்பாபிஷேக விழாவினை ஒட்டி கடந்த 23ம் தேதி காலை கிராம தேவதை வழிபாடு, கணபதி ஹோமம், நவகிரக ஓமம், லக்ஷ்மி ஓமம்,தனபூஜை,கோ பூஜை, தீபாரதனைகளும் நடந்தது. தொடர்ந்து கடந்த 3 நாட்களாக பரிகார பூஜைகளும் யாகசாலை பூஜைகளும் நடந்தது. நேற்று 25ம் தேதி ராஜ கோபுரம், விமான கோபுரம், அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மாள் சமேத திருக்கண்டீஸ்வரர் கும்பாபிஷேகமும், கொடிமரம், பரிவார கும்பாபிஷேகமும் நடந்தது. அதனை தொடர்ந்து சுவாமிக்கு மகா அபிஷேகமும் தீபாரதனையும் நடைபெற்றது விழாவில் பங்கேற்ற பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. மகா கும்பாபிஷேக விழாவில் செய்யாறு எம்எல்ஏ சுப்பிரமணியன், திமுக, அதிமுக, தேமுதிக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும் ஆக்கூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து சென்றனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA